பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

30 09 2024 **MONDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்பட்டால்தான் வளர்ச்சியை உறுதி செய்ய முடியும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. சேலம் உருக்காலை உள்ளிட்ட தென்னிந்தியாவில் உள்ள மூன்று உருக்காலைகள் விரிவாக்கம் செய்யப்பட உள்ளதாக மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு ஹெச் டி குமாரசாமி தெரிவித்துள்ளார்.

3. படைப்பாற்றல் துறையின் முனையமாக இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

4. ரத்த தானம் செய்ய அனைவரும் முன்வர வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. ஆசிய இளையோர் வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா ஆறு தங்கம், ஏழு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

---- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்பட்டால்தான் வளர்ச்சியை உறுதி செய்ய முடியும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்திய காவல்பணி பயிற்சி அதிகாரிகளிடையே கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

சிறந்த நிர்வாகத்திற்கு அடித்தளமாக சட்டம் - ஒழுங்கு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மக்களின் உரிமைகளை பாதுகாப்பது, சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவது போன்றவற்றை உறுதி செய்வதில் காவல்துறை அதிகாரிகள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

<<<<<>>>>>

சேலம் உருக்காலை உள்ளிட்ட தென்னிந்தியாவில் உள்ள மூன்று உருக்காலைகள் விரிவாக்கம் செய்யப்பட உள்ளதாக மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு ஹெச் டி குமாரசாமி கூறியுள்ளார்.

இன்று சேலம் உருக்கு ஆலையில் ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

சேலம், விசாகப்பட்டினம் மற்றும் கர்நாடகாவில் உள்ள விஸ்வேஸ்வரய்யா உருக்காலைகளை விரிவாக்கம் செய்வதற்கான ஆலோசனைக்கூட்டம் விரைவில் புதுதில்லியில் நடைபெறவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

அங்கன்வாடி பணியாளர்கள் அனைவரும் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் இணைக்கப்பட உள்ளதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி கூறியுள்ளார்.

ராஞ்சியில் நடைபெற்ற தேசிய ஊட்டச்சத்து மாத நிறைவு விழாவில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்காக மத்திய பட்ஜெட்டில் 3 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

மகளிர் தலைமையிலான மேம்பாட்டிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>

படைப்பாற்றல் துறையின் முனையமாக இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில், தனியார் பண்பலை வானொலி நிலையம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

சமுதாயத்தில் வானொலி ஆக்கப்பூர்வமான மாற்றங்களை கொண்டுவருவதை உணர்ந்து, அதற்கு உரிய அங்கீகாரத்தை பிரதமர் வழங்கி வருவதாக அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாகத்தான் தொடர்ந்து மூன்றாவது முறையாக பொறுப்பேற்றுள்ள பிரதம்ர திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, புதிதாக 100 பண்பலை வானொலி நிலையங்களை தொடங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

நாடு முழுவதும் 234 நகரங்களில் இந்த பண்பலை ஒலிபரப்பு தொடங்கப்பட உள்ளதாக திரு எல். முருகன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

ரத்த தானம் செய்ய அனைவரும் முன்வர வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

தேசிய தன்னார்வ ரத்ததான தினம் நாளை கடைபிடிக்கப்படுவதையொட்டி வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

தமிழகத்தில் 107 அரசு மற்றும் 247 தனியார் ரத்த மையங்கள் செயல்பாட்டில் உள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

ரத்த தானம் செய்பவர்களுக்கு அரசு சார்பில் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டு, புத்தகங்கள் வழங்கப்படுவதாகவும் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

திமுக-வில் வாரிசு அரசியல் தொடர்வதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று சேலம் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக-வை சேர்ந்த மூத்த அமைச்சர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு துணை முதலமைச்சர் பதவி வழங்கப்படவில்லை என்று கூறினார்.

சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள் முழுமையாக நிறைவடையவில்லை என்றும், திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (1) – 49 செகண்ட்ஸ்)*

கடல் பகுதிகளில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரை கண்ணன் அறிவுறுத்தினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (2) – 24 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் உள்ள அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

------------------

நெல்லை மாநகராட்சியின் மன்றக்கூட்டம் மேயர் திரு ராமகிருஷ்ணன் தலைமையில் இன்று நடைபெற்றது.

--------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும்நாள் கூட்டம் ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் இன்று நடைபெற்றது.

-------------

தருமபுரி மாவட்டத்தில் புத்தக திருவிழா தொடர்பான விழிப்புணர்வு வாகன சேவையை ஆட்சியர் திருமதி சாந்தி இன்று தொடங்கிவைத்தார்.

-------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆட்சியர் திருமதி அழகுமீனா வலியுறுத்தியுள்ளார்.

--------------------

தேனி மாவட்டத்தில் 12 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி ஷஜீவனா இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

--------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கள்ளச்சாராயம் மற்றும் போதைப்பொருட்கள் விற்பனையில் ஈடுபடுவோர்மீது குண்டர் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல்துறை கண்காணிப்பாளர் திரு ரஜத் சதுர்வேதி எச்சரித்துள்ளார்.

**<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய இளையோர் வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா ஆறு தங்கம், ஏழு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

சீன தைபே-யில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், 21 வயதுக்கு உட்பட்டோருக்கான கலப்பு குழு பிரிவிலும், ஆடவர் குழு பிரிவிலும், மகளிர் குழு பிரிவிலும் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

21 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில் கணேஷும், மகளிர் ஒற்றையர் பிரிவில் **Avneet**-ம், 18 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் **Prithika**-வும் தங்கப்பதக்கம் வென்றனர்.

21 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவுகளில் தியானேஷ்வரி மற்றும் பார்கவி பென்னும், 18 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் **Sharvari**-யும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

18 வயதுக்கு உட்பட்டோருக்கான கலப்பு குழு பிரிவுகளில் இந்தியா நான்கு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 7 தங்கம், 9 வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

-------------

உலக ஜூனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

பெருவின் லிமாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Promod – Lakshita Bishnoi** இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 2 தங்கம், மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

--------------

17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியில் இந்தியா – பங்களாதேஷ் இடையேயான இறுதியாட்டம் தற்போது பூட்டானில் நடைபெற்று வருகிறது.

-------------

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் பங்களாதேஷ் இரண்டாவது இன்னிங்சில் 2 விக்கெட் இழப்பிற்கு 26 ரன் எடுத்துள்ளது.

கான்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு 285 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

பங்களாதேஷ் முதல் இன்னிங்சில் 233 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

----------

சென்னையில் இன்று தொடங்கிய ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் ஆட்டநேர இறுதியில் விக்கெட் இழப்பின்றி 103 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக, ஆஸ்திரேலியா 293 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**<<<<<END>>>>>**